**கூடுதல் இயக்குநர் (நிர்வாகம் மற்றும் திட்டம்), முன்னாள் படைவீரர் நல இயக்ககம், 22, ராஜா முத்தையா சாலை, சென்னை–3 அவர்களின் செயல்முறை ஆணைகள்.**

. . . ..

முன்னிலை: மேஜர் வி எஸ் ஜெயகுமார் (ஓய்வு),
கூடுதல் இயக்குநர்.
(நிர்வாகம் மற்றும் திட்டம்)

இருப்பிடம்: சென்னை– 600 003.

. . .

செயல்முறை ஆணை எண்: 12165/2023/நிர்1 நாள்: 13.09.2023

பொருள்: பணியமைப்பு – முன்னாள் படைவீரர் நலத்துறை – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV போட்டித் தேர்வு 24.07.2022 அன்று நடைபெற்றது – தெரிவு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டது– பணிநியமன ஆணைகள் வழங்குதல் – தொடர்பாக.

சுட்டு:
1. அரசாணை எண். 601, பொது(முன்னாள் படைவீரர்)த் துறை, நாள். 08.07.2011.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 அவர்களின் கடித எண். 1942/PSD–D2/2023, நாள்.24.08.2023.

****

**ஆணை:**

சுட்டு (1)ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி சுட்டு (2)ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV போட்டித் தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் மூலம் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு முன்னாள் படைவீரர் நலத்துறை அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு கூடுதல் இயக்குநர் அவர்களால் கீழ்க்குறிப்பிட்டவாறு பணிநியமன ஆணைகள் வழங்கப்படுகிறது.

2. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV போட்டித் தேர்வின் மூலம் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட நபர்கள் அவர்களது பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களில் தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் விதி எண். 10 (a) (1)–ல் கண்டுள்ள நியமன விதிகளின்படி இளநிலை உதவியாளர்களாக அப்பதவியில் பணியேற்கும் நாள் முதல் தற்காலிகமாக நியமனம் செய்யப்படுகின்றனர்.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி (திரு/திருமதி/செல்வி) | நியமனம் செய்யப்படும் அலுவலக முகவரி | எந்த பணியாளரின் பணியிடத்தில் நியமனம் செய்யப்படுகிறார் |
|---|---|---|---|
| 1. | S. Antony Renald<br>4/453 B2–1<br>Kani Nagar, Paramakudi<br>Ramanathapuram<br>Pin – 623707 | உதவி இயக்குநர்.<br>முன்னாள் படைவீரர் நல அலுவலகம்<br>காஞ்சிபுரம் மாவட்டம்<br>(இருப்பு) தாம்பரம்,<br>சென்னை–45 | திருமதி பு. ஆனந்தி<br>இளநிலை உதவியாளர் |

2...

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி (திரு/திருமதி/செல்வி) | நியமனம் செய்யப்படும் அலுவலக முகவரி | எந்த பணியாளரின் பணியிடத்தில் நியமனம் செய்யப்படுகிறார் |
|---|---|---|---|
| 2. | S. Deepapriya<br>14-9-17<br>Judge Somasundaram St.,<br>Batlagundu, Dindigul<br>Pin-624202 | உதவி இயக்குநர்.<br>முன்னாள் படைவீரர் நல அலுவலகம்<br>புதுக்கோட்டை மாவட்டம் | காலியிடம் |
| 3. | M. Rajeswari<br>4/86, Ayyakutti Valasu,<br>Kungarupalayam PO<br>Utiyur via Kangayam,<br>Tiruppur District Pin-638701 | முன்னாள் படைவீரர் நல இயக்ககம்,<br>சென்னை-3 | திரு. ப. இராமஜெயம்<br>இளநிலை உதவியாளர் |
| 4. | S. Dayana<br>3/32, Arunagiripalayam,<br>Sullipalayam PO<br>Paramathi velur TK<br>Namakkal DistrictPin-637203 | உதவி இயக்குநர்.<br>முன்னாள் படைவீரர் நல அலுவலகம்<br>திருவண்ணாமலை மாவட்டம் | திருமதி சி. சரிதா<br>இளநிலை உதவியாளர் |
| 5. | A. Imran Khan,<br>D.No.40<br>Nattanmai Alagiri street,<br>Cumbum, Theni Pin - 625516 | முன்னாள் படைவீரர் நல இயக்ககம்,<br>சென்னை-3 | திரு ச. செந்தில்<br>இளநிலை உதவியாளர் |
| 6. | V. Nirmal Kennedy<br>Marambadi, Dindigul<br>Vedasandur, Dindigul<br>Pin-624709 | உதவி இயக்குநர்.<br>முன்னாள் படைவீரர் நல அலுவலகம்<br>நாகப்பட்டினம் மாவட்டம் | திருமதி ரா. சுமதி<br>இளநிலை உதவியாளர் |
| 7. | A.Seenu<br>42, Gayathri street<br>Tiruvannathapuram Pottal<br>Kizhanatham Post<br>Tirunelveli, Pin-627353 | உதவி இயக்குநர்.<br>முன்னாள் படைவீரர் நல அலுவலகம்<br>கன்னியாகுமரி மாவட்டம்<br>(இருப்பு) நாகர்கோவில் | திருமதி கே. உமா மகேஸ்வரி,<br>இளநிலை உதவியாளர் |

3. பணியேற்க உள்ள தேர்வாளர்கள் தங்களது அசல் மற்றும் நகல் கல்வி தகுதி சான்றிதழை பணியேற்பு செய்யும் அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். தங்களது வேலைவாய்ப்பு பதிவட்டையினை (Employment exchange identity card) அசலாக ஒப்படைத்தல் வேண்டும். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 20(5)-ன்படி, உடல் தகுதிச் சான்றிதழ் (Physical Fitness Certificate) ஒன்றினை அதற்கென அமைந்த படிவத்தில் (இரண்டு பக்க படிவம்) தமிழ்நாடு அரசின் சிவில் சர்ஜன் தகுதிக்கு குறையாத மருத்துவரிடம் பெற்று பணியேற்பு செய்யும் இடத்தில், பணியேற்பு நாளில் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளியாக இருப்பின், இயலாமையின் தன்மை, இயலாமையின் சதவீதம் மற்றும் மாற்றுத் திறனாளிக்கான சிறப்பு வேலைவாய்ப்பு பிரிவுடன் இணைந்த மருத்துவ ஆய்வுக் குழுவிடம் பெறப்பட்ட உடல்நிலை குறித்த சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேற்குறிப்பிட்ட தேர்வாளர்கள், இந்நியமன ஆணை கிடைக்கப்பெற்றவுடன் 22.09.2023-க்குள் நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்திடல் வேண்டும். குறிப்பிட்ட காலகெடுவிற்குள் பணியேற்பு செய்திடாமல் கால அவகாசம் கோரும் எந்த ஒரு விண்ணப்பமும் ஏற்கப்படமாட்டாது. அவ்வாறு குறிப்பிட்ட காலகெடுவிற்குள் குறிப்பிட்ட அலுவலகத்தில் பணியேற்பு செய்திட தவறும் தேர்வாளரின் பெயர் Combined Civil Services Examination – IV (Group-IV) இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலிருந்து நீக்கம் செய்யப்படும். தேர்வாளர்கள் பணியேற்கும் நாள் முதல் தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதம் 2017 விதிகளின்படி சம்பள ஏற்ற முறையில் நிலை 8-ல் உள்ள ரூ.19,500-71,900 என்ற சம்பள ஏற்ற முறையில் சம்பளம் மற்றும் ஏனைய படிகள் பெறத் தகுதியுடையவராகிறார்கள்.

5. பணியேற்பு செய்வதற்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது. பணிப்பொறுப்பினை முழுமையாகவும், முறையாகவும் மேற்கொள்ள வேண்டும்.

6. இந்த தற்காலிக நியமனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையப் பட்டியலின்படி ஆணையிடப்பட்டுள்ளது. இந்நியமனம் தற்காலிகமானதால், காரணம் ஏதும் தெரிவிக்கப்படாமல் எந்த நேரத்திலும் பணிமுடிப்பு செய்யப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. தேர்வாணையத்திடம் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் தெரிவித்த விவரங்கள் உண்மையானது அல்ல என பின்னர் தெரியவந்தால், இவரது தற்காலிக தெரிவு மற்றும் தற்காலிக பணிநியமனம் முன்னறிவிப்பின்றி உடனடியாக இரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7. இச்செயல்முறை ஆணையினைப் பெற்றுக் கொண்டமைக்கு ஏற்பளிப்பு அளித்தல் வேண்டும்.

(ஒம்) வி எஸ் ஜெயகுமார்,
கூடுதல் இயக்குநர்.
(நிர்வாகம் மற்றும் திட்டம்)

பெறுநர் **(ஒப்புகை பதிவஞ்சலில்)**

1. S. Antony Renald
   4/453 B2-1
   Kani Nagar, Paramakudi
   Ramanathapuram, Pin – 623707
2. S. Deepapriya
   14-9-17 Judge Somasundaram St.,
   Batlagundu, Dindigul, Pin-624202
3. M. Rajeswari
   4/86, Ayyakutti Valasu,
   Kungarupalayam PO
   Utiyur via Kangayam,
   Tiruppur District Pin-638701
4. S. Dayana
   3/32, Arunagiripalayam,
   Sullipalayam PO
   Paramathi velur TK
   Namakkal District Pin-637203

5. A. Imran Khan,
   D.No.40 Nattanmai Alagiri street, Cumbum,
   Theni, Pin - 625516
6. V. Nirmal Kennedy
   Marambadi, Dindigul
   Vedasandur, Dindigul, Pin-624709
7. A.Seenu
   42, Gayathri street
   Tiruvannathapuram Pottal
   Kizhanatham Post, Tirunelveli Pin-627353

**நகல்:**

1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 — சுட்டு (2)ல் காணும் கடிதத்தின் பத்திஎண்.12-ன்படி தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. இயக்குநரின் நேர்முக உதவியாளர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை- 3.
3. உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம், காஞ்சிபுரம், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். — தேர்வாளரை பணியில் சேர்ந்திட அனுமதிக்கும் முன்னர், தேர்வாளர்களின் அசல் கல்வித் தகுதி சான்றிதழ்களை சரிபார்த்து பணியேற்பு செய்திட அனுமதித்தல் வேண்டும். மேலும், தேர்வாளர்களிடமிருந்து வேலைவாய்ப்பு பதிவட்டையினை அசலாக பெற்று அதனை சம்பந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அனுப்பிவைத்து பணிநியமனம் செய்யப்பட்ட விவரத்தினை தெரிவித்து, வேலைவாய்ப்பு பதிவினை ரத்து செய்திட நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். வேலைவாய்ப்பு பதிவு இரத்து செய்து பெறப்படும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக கடித நகலினை இயக்ககத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தேர்வாளர்கள் பணியேற்பு செய்த தேதியுடன் அவர்களிடமிருந்து பெறப்பட்ட அசல் உடல் தகுதி சான்றிதழ் (Physical Fitness certificate) மற்றும் கல்வித் தகுதிச் சான்றுகளின் நகலினை சம்பந்தப்பட்ட முன்னாள் படைவீரர் நல துணை/ உதவி இயக்குநர்களின் மேலொப்பத்துடன் இயக்ககத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1
5. சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
6. நிர்வாக பிரிவு-3
7. முதன்மை ஆணைத் தொகுப்பு/இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

14/9/23

இயக்குநரின் நேர்முக உதவியாளர்.

14/9/23 14/9/2023